# யாழ் நகரில்

# தமிழுக்கு விழா!

## தமிழ்ப் பெரியார்க்குச் சிலை!!

✻

யாழ். மாநகரசபை வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மாநகர முதல்வர்

# வாழ்த்துகிறார்

யாழ்ப் நகரம் தமிழ்க் கலாச்சாரத்தின் உயர்பீடம். இந்தப் பீடத்தை அலங்கரித்து வந்தவர்கள் நம் நாட்டில் தோன்றிய சான்றோர்கள். அவர்களைப் போற்றாமல் நமது கலாச்சாரத்தை வளர்க்க முடியாது.

நான் தமிழ் மக்களுக்கு பணியாற்றப் பேறு பெற்றதை எண்ணி மகிழ்கின்றேன். என் பணிகளுள் மிகச் சிறப்பான ஒன்றாக இச்சிலை திறப்பு விழாவைக் கருதுகின்றேன்.

யாழ்நகரை அலங்கரிக்கும் இத்திருவுருவச் சிலைகள் உங்கள் ஒவ்வொரு வீடுகளையும் அலங்கரிக்கவேண்டுமென்பது என் ஆவல். அந்த ஆவலை இச்சிறு அழகிய நூல் நிறைவேற்றுகின்றது.

வாழ்க தமிழ்!

வாழ்க சான்றோர்!!

அல்பிரட் த. துரையப்பா

மாநகர முதல்வர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க!

யாழ்நகர் வாழ்க! யாழ்எழு தமிழும் வாழ்க!
சூழ்கடல் ஈழத் தாயின் துயரெலா மின்றே
ஆழுக அறிவுக் கோயிற் சிலையெலாம் பொலிக
நீழுக நட்பு மன்பும் நாமெலாம் வாழவென்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த் தாய் ஔவை



சிலை திரைநீக்கம் செய்த திகதி — 10-7-74

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஔவையார் :

ஔவை தமிழ் அறத்தமிழ். தமிழில் பாட்டாத் தமிழ் இல்லை; பாட்டி தமிழ் உண்டு. அவள் தமிழுக்கு வாய்த்த ஒரே ஒரு பாட்டி.

மறக்களத்திலும் அறம் உரைத்த பாட்டி; அவள் உருவம் தமிழ் உருவம், தமிழ் உருவம் அவள் உருவம். அவளின்றித் தமிழில்லை; தமிழரில்லை.

அன்னாருக்குச் சிலை எடுத்த மாநகரசபை நீடு வாழ்க!

தமிழ்ப் பாட்டியின் பேருருவச் சிலையினைத் திரைநீக்கம் செய்தவர் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி. தங்கம்மாவின் தமிழ், தங்கத்தமிழ். அவர் ஆற்றிய உரையின் சுருக்கம் வருமாறு :

ஔவை என்றால் தாய். அவர் தாயாக மட்டுமல்ல, தமிழர் சரித்திரத்தில் தொண்டமானிடம் தூது சென்ற அரசியல் தூதுவராகவும் விளங்கினார்; விவசாயத்தை விருத்தி செய்யக் கூறிய சிறந்த பொருளாதார நிபுணராகவும் திகழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழுக்குத் கதியான வள்ளுவப் பெருந்தகை



சிலை திரைநீக்கம் செய்த திகதி — 11-7-74

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவள்ளுவர் :

ஓதற்கு எளிது; உணர்தற்கு அரிது என மாங்குடி மருதன் சிறப்புச்செய்த வள்ளுவம் தந்த வள்ளுவன் இதோ யாழ் நகரை அணி செய்கின்முன்.

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்தவர் தமிழர் எனப் பெருமைப்பட்டோம் ஆண்டுகள் 2000 கழிந்தன. உலகப் புகழ் தந்தவனுக்கு ஓங்கு புகழ் சிலை ஈழத்தில் எடுத்தார் யாரும் இல்லை. அக்குறை தீர்த்த நகரமுதல்வர்க்கு நன்றி.

சிலையினைத் திறந்துவைத்த பெருமகன் பேராசான், தமிழ்க் கண், தமிழ்க்கடல் வித்துவான் ந. சுப்பையாபிள்ளை அவர்கள்.

அவர் ஆற்றிய உரையின் சுருக்கம் வருமாறு :


வள்ளுவர் ஒருமதத்தினருக்கோ, நாட்டினருக்கோ உரியவர் அல்லர். அவர் உலகத்துக்கே உடமையானவர். வள்ளுவரின் குறள் நூல், உலகப்பொது நூல். பல நாடுகள் இன்று பல மொழிகளில் இந்நூலை மொழி பெயர்த்துப் பலனடைவதி லிருந்து வள்ளுவரின் பெருமை புலப்படுகின்றது.

அத்தகைய வள்ளுவப் பெருந்தகைக்கு இன்று யாழ் மாநகர சபை வெள்ளி விழாவில் நகரமுதல்வர் சிலை எடுத்ததைத் தமிழ் மக்கள் பாராட்டாமல் இருக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் அறம் தந்த அண்ணல் காந்தியடிகள்



சிலை திரைநீக்கம் செய்த திகதி — 7-7-74

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாத்மாகாந்தி:

காந்தியடிகளை நினைவு கூராமல் 20-ம் நூற்றுண்டு அரசியல் நிறைவு பெருது.

உரிமைப் போராட்டத்தை அருள் வழியில் நடத்திய அதே நேரத்தில், உரிமை கோரும் மக்களையும் உரிமை வாழ்வுக்குத் தகுதியாக்க அருந்தியாகங்கள் புரிந்தவர் அவர்.

அன்னுரின் உருவச்சிலை யாழ்நகரில் இல்லாதது பெருங்குறை. இதுவரை பதவி வகுத்தோர் யாரும் நினைக்காத பெருந்தவறு மக்கள் மேயர் துரையப்பாவால் நீங்கியது.

அடிகளார் திருவுருவச் சிலையைத் திரைநீக்கம் செய்தவர் பொது நிர்வாக உள்ளூராட்சி உள்நாட்டலுவல்கள் அமைச்சரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதி அமைச்சருமான மாண்புமிகு பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டார நாயக்கா அவர்கள் ஆவர். தமிழ் மக்களின் நீதிமன்ற மொழி தமிழே எனத் தமிழுக்கு நீதி செய்த பெருமகனும் அவரே.

சிலை எடுத்தபோது அவர் ஆற்றிய உரை வருமாறு:

சாதி, சமய வேறுபாடின்றி நேர்வழியில் நடப்பவன் என்பதினுலேயே தொண்ணூற்றைந்து வீதம் பௌத்த மக்களை உள்ளடக்கிய தோம்பே தொகுதியில் பெரும்பான்மை வாக்குகளால் மகத்தான வெற்றியை ஈட்டினேன்.

இன்று எம்முன் திருவுருவாக இருக்கும் காந்திமகான் சத்தியாக்கிரகம் என்னும் அகிம்சை போராட்டத்திஞல் ஒரு சாம்பிராச்சியத்தையே வென்றவர். ஆனுல் இன்று சத்தியாக்கிரகம் என்னும் புனிதப்பேரால் ஒருசிலர் ஆட்சியாளரைக் கவிழ்க்க முயலுகின்ருர்கள். இச்செய்கை இம் மகான் நடத்திய அருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிக்கு இழுக்காகவுள்ளது. உலகம் போற்றும் இவ் உத்தமனுக்கு சிலையெடுத்த யாழ் மேயர் மக்கள் மனதில் என்றும் நிலைநிற்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாயோகி மு. ஆனந்தக்குமாரசாமி



சிலை திரைநீக்கம் செய்த திகதி — 22-7-74.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாயோகி ஆனந்தக்குமாரசாமி

கலாயோகம் எனப் புதியதோர் யோகமார்க்கத்தையே உண்டுபண்ணியவர் கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமி அவர்கள். நடராச தத்துவத்தை யுணர்ந்து உலகுக்கு உணர்த்தியவர் அவரே. ஈழத்தின் பெருமையைச் சைவத்தின் சிறப்பை உலகுக்கு உணர்த்திய பெருமகனுக்கு ஓர் சிலை. ஆம் அது ஒப்பற்ற சிலை.

அச்சிலையினைத் திரைநீக்கம் செய்தவர் தபால் தந்திப் போக்குவரத்து அமைச்சர் மாண்புமிகு செல்லையா குமாரசூரியர் அவர்களாகும்.

அவர் தமிழினத்தின் அரசியலிலே புதியதோர் உலகு செய்த சிற்பி. அவர் ஆற்றிய உரை வருமாறு :

நமது பிரதமரும் பாரதப் பிரதமரும் கலாயோகி ஆனந்தக் குமாரசாமியின் கலா உணர்ச்சியைக் கண்டு ஆனந்தம் கொள்பவர்கள். எங்கள் பிரதமர் காலையில் எழுந்ததும் இரண்டு மலர்களைப் பறித்து ஒன்றை நடராசர் சிலை முன்பும் மற்றதைப் புத்தரின் பாதங்களிலும் வைத்து வணங்குவார். கலாயோகி நடராச தத்துவத்தை உலகுக்கு உணர்த்தியவர். அத் தகையவருக்குச் சிலையெடுத்த நகர முதல்வர் முற்பிறப்பில் என்ன தவஞ் செய்தாரோ? கலாயோகிக்கு ஞாபகார்த்த முத்திரை வெளியிட்டபோது ஐக்கிய அமெரிக்காவிலிருந்து வாழ்த்துக்கள் வந்து குவிந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கத் தாத்தா எங்கள் தாத்தா

நவாலியூர் க. சோமசுந்தரப்புலவர்



சிலை திரைநீக்கம் செய்த திகதி – 12-8-74

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவாலியூர் சோமசுந்தரப்புலவர்

ஈழத்தாய் ஈன்றெடுத்த இணையில்லா "தங்கத்தாத்தா" சோமசுந்தரப் புலவர் ஈழத்துப் புலவர் வரிசையில் சிறப்பிடத்தை வகிக்கின்றார். "தங்கத்தாத்தா" என்றால் அறியாச் சிறுவர் இல்லை. அவரை மறந்தாலும் "ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை" "கத்தரி வெருளி"ப் பாட்டையும் மறக்க முடியாது. பொது மக்கள் யாவரும் வாசித்து இன்புறும் வண்ணம் எம்நாட்டு பண்பை விளக்கும் வகையில் பாடல் இயற்றினார் தங்கத்தாத்தா.

இத்தகைய தமிழ் வளர்த்த சான்றோராகிய "தங்கத்தாத்தா" சோமசுந்தரப் புலவருக்கு யாழ் நகரில் நினைவுச் சிலையெழுப்பிய யாழ் நகர முதல்வரின் தணியாத தமிழுணர்வு வாழ்க! வளர்க!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கத்தாத்தாவின் பேருருவச் சிலையை திறந்து வைத்தவர் தமிழரை, தமிழ்மொழியை, தமிழர்பண்பாட்டைக் கௌரவித்த கூட்டு முன்னணி அரசாங்கத்தின் வர்த்தக அமைச்சர் கௌரவ ரி. பி. இலங்கரெத்தின அவர்கள். அன்னார் ஆற்றிய உரை வருமாறு: தமிழ் மொழி, கலை, கலாச்சாரத்திற்குத் தீங்கு இழைக்கும் எண்ணம் எமக்கு அன்றும் இருந்ததில்லை, இன்றும் இருந்ததில்லை. எனது நூலொன்றைச் சோமசுந்தரப் புலவரின் உறவினரான அருணாசலத்தின் மகள் தமிழில் மொழி பெயர்த்துள்ளதாக அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்த அரசாங்கம் தமிழ் மொழியை வளர்க்கவே எண்ணுகிறது. அதற்கு மாருகப் பலர் பிரசாரம் செய்து வருகிறார்கள் யாழ். வளாகம் ஏற்படுத்தியதும் தமிழ்மொழியைச் சட்ட மொழியாக்க வசதி செய்து வைத்ததும் இந்த அரசாங்கமே. தமிழ் மொழியின் உரிமைக்குச் சட்டம் செய்ய வேண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுமென்று சிலர் சொல்கிறார்கள். சட்டம் செய்யக் கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டியது மக்களுடைய பொறுப்பாகும்.

மகாகவி சோமசுந்தரப்புலவர் தற்காலத் தமிழ்க் கவிதைக்கு ஆற்றிய தொண்டை வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ப் பணியாற்றும் யாழ். மாநகர சபை

↓

# இலங்கைத் தமிழ்க் கலாச்சார ஆய்வு மன்றம்

பல்கலைக் கழகங்களுக்கும், கல்லூரிகளுக்கும் அப்பால் தமிழும், தமிழ் ஆராய்ச்சியும் பரவிப் பல்வேறு தொழில் செய்யும் அறிஞர்களும் தமது ஆய்வுப்பணியினைச் செய்து தமிழுக்கு அணி செய்ய எழுந்ததே இம் மன்றம்.

சந்தர்ப்பத்துக்குத் தமிழ் விழா எடுப்போர் பலர் உளர். தமிழுக்கு நிலையான வளம் சேர்க்க உழைப்போர் மிகச் சிலர். அக்குறையை நீக்கித் தமிழை வளர்ப்பதே இம்மன்றத்தின் நோக்கமாகும்.

பேரறிஞர் பலர் மேற்கொண்டுள்ள இம்முயற்சியினால் தமிழ் மொழி சிறப்புறும் என்பதில் ஐயம் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவீன சந்தை 2-ம் கட்டம்

மக்கள் நவீன சந்தையின் 2-ம் கட்ட அமைப்பு வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. இதற்குத் தேவையான கடனை மத்திய அரசிடமிருந்து பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மத்திய சந்தையின் 2-ம் கட்ட வேலையும் பூர்த்தியான பின்பு யாழ் நகர் எழில் மிகுந்த நகரமாகக் காட்சியளிக்கும். தமிழ் பேசும் மக்களின் தலைநகரில் இது சிறந்த அம்சமாக அமையும்.

## தண்ணீர் விநியோகத் திட்டம் 2-ம் கட்டம்

யாழ் நகரின் குழாய் நீர் விநியோகத்திட்டத்தினுல் ஒரு சில வட்டாரங்களே பயன் அடைகின்றன. மற்றைய வட்டார மக்களின் நலனையும் கருத்தில் கொண்டு தண்ணீர் விநியோகத் திட்டத்தின் 2-ம் கட்டமும் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இவ் வேலையும் பூர்த்தியான பின்பு யாழ். நகர மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சனையும் தீர்ந்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்யாண மண்டபம்

தமிழப் பெண்களுக்குத் திருமணம் நடைபெறுவதில் பல சிரமங்கள். ஒருவாறு அதை ஒப்பேற்றிவிட்டால் திருமணத்தைச் சிறப்பாக நடத்துவது எங்கே? எந்த இடத்தில் என்பது அடுத்த பிரச்சினை.

செல்வர்களுக்கு மண்டபங்கள் உண்டு: ஆனல் ஏழைக்கு இடம் எங்கே? அந்தக் குறை ஏழைகளின் தோழன், மக்கள் தலைவன் துரையப்பாவின் உள்ளத்தைப் பலகாலமாக துளைத்து வருகிறது.

தமிழர் கலாச்சாரப் பாரம்பரிய பின்னணியில் நவீன வசதிகள் சிறிதும் குறையாமல் ஒரு ஏழையின் திருமணமும் சிறப்பாக நடைபெற வேண்டுமென்ற ஆசையால் எழுந்ததே கல்யாண மண்டபம் கட்டவேண்டுமென்ற ஆசை.

தெய்வீகச் சூழ்நிலை விளங்கும் நல்லூரின் எல்லையிலே மண்டபத்துக்கான இடம் தெரிவு செய்யப்பட்டு விட்டது. திருவிழாக் காணும் அன்பர்கள் எல்லாரும் கல்யாண மண்டபக் கட்டிடத்துக்கான இடத்தைப் பார்த்து மகிழ்வார்கள். ஆசீர்வதிப்பார்கள் என்பதில் நாம் மனநிறைவு காண்கின்றேம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாநகராட்சி மன்றம் நடாத்தும் சமய அறிவுப் போட்டி

யாழ். மாநகராட்சி மன்றம் என்றால் அது ஒரு அரசியல் கூட்டம் என்ற நினைவை மாற்றி அது சமூகப்பணியாற்றும் மன்றம் என்ற நினைவை ஏற்படுத்தியவர் நகரமுதல்வர் துரையப்பாவாகும்.

சமய உணர்ச்சியும் சமய வாழ்வும் சமூக அடித்தளமாக அமைய வேண்டும் என்ற எண்ணத்தால் சமய அறிவுப்போட்டியைக் கடந்த பல ஆண்டு காலமாக நல்லூர்க்கந்தன் திருவிழாக் காலத்தில் நடத்தி வருகிறார்கள்.

யாழ். மாநகரசபை நடத்தும் சமயப்போட்டியின் சிறப்பு இயல்பு ஒன்று உண்டு. இந்தப்போட்டியில் கொடுக்கப்படும் வினாக்கள் அறிவைச் சோதிப்பதைமாத்திரம் நோக்கமாகக் கொண்டவையல்ல. சமய அறிவைத் தேடிக்கொள்ளத் தூண்டுவனவாக அமைந்துள்ளன. அறிஞர்களிடம் தேடிச்சென்று, பல நூல்களைத் துருவிப்படித்து விடையெழுதும் நோக்கமாக அமைந்தவை. இவ்வகையில் இப்போட்டி தனித்தன்மை வாய்ந்து விளங்குகின்றது என்பதை அன்பர்கள் அறிவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்முறை நல்லூர்க்கந்தன் திருவிழா

ஈழத்தின் வடக்கே ஒரு கந்தன். தெற்கே ஒரு கந்தன். இவன் நல்லைக்கந்தன். அவன் கதிர்காமக்கந்தன். கந்தன் கருணை வெள்ளம் பாயும் ஈழத்தின் நல்லை நகரை நோக்கித் திரண்டு வரும் பக்தி வெள்ளத்தால் கந்தன் கோயில் வீதியெல்லாம் புனிதமடைகின்றன.

அடியார்கள் எவ்வித இடையூறுமின்றிக் கந்தனை வணங்கத் தடையாயிருந்த வீதியோரக்கடைகள் நீக்கப்பட்டன. அகன்ற வீதிகளில் உலாவரும் கந்தப்பெருமானின் திருவுலாக்காட்சியைக் கண்டு களிக்கப் பக்தர்களுக்கு வசதி செய்து தரப்பட்டுள்ளது. பல்லாயிரக்கணக்காகப் பணத்தைச் செலவழித்து மாநகரசபை நடத்தும் திருப்பணிகளுள் இதுவும் ஒன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் பொதுசன நூலகத்தில் அமைந்துள்ள

# இலங்கைத் தமிழ்க் கலாச்சார ஆய்வு மன்றம்

மன்றத்தின் நோக்கம்:-

தமிழ்க் கலாச்சாரம் பற்றிய பல்வேறு துறைகளில் ஆய்வுகள் நடத்துதல், அவற்றிற்குரிய சூழ்நிலைகளையும் வாய்ப்புக்களையும் உருவாக்குதல்.

காப்பாளர்: அல்பிரட் த. துரையப்பா (யாழ். முதல்வர்)
தலைவர்: திருமதி இ. நவரத்தினம்
அமைப்பாளர்: வித்துவான் க. ந. வேலன்
செயற்குழு: கலாநிதி ச. தனஞ்சயராசசிங்கம்
திரு. கி. பாலகிட்ணர்
திரு சிவா. உ. சோமசேகரன்
திரு. வ. பொன்னம்பலம்
திரு. சி. சிவகுருநாதன்
திரு. மு. இளையதம்பி
பண்டிதர் க. வீரகத்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிலை திறக்கப்பட இருக்கும்
## தமிழ்ப் பெரியார்களின் பெயர்கள்

சேர் பொன். இராமநாதன்
சங்கிலிய மன்னன்
சுவாமி ஞானப்பிரகாசர்
சுப்பிரமணிய பாரதியார்
சி. வை. தாமோதரம்பிள்ளை
சுவாமி விபுலானந்த அடிகள்
யோகர் சுவாமிகள்

மற்றும் பெரியார்களின் சிலைகளும் இடம்பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுறவு அச்சகம்,
யாழ்ப்பாணம்.

விலை ரூபா 1/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org